Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 2/2022
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 1

| | | | |
|---|---|---|---|
| Name: | மலர் | Calling: | இல்லத்தரசி |
| Father's Name: | மணிமாறன் | Religion: | |
| Village: | கொத்தக்கோட்டை | Age: | 50 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 27.03.2026 நேரம் : 01.30 PM

(எதிரி ஆஜர் . )

அ.சா.1 மனுவின்பேரில் அழைத்து இரண்டாவது முறையாக எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

நான் எனது முதன்மை விசாரணையில் கூறிய விவரங்களை போலிசார் சொல்லிக்கொடுத்ததின் பேரில் தான் கூறினேன் என்றால் சரிதான். எதிரியின் தங்கைதான் எனது மருமகள் என்றால் சரிதான். எனது மகனும் மருமகளும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். இதற்கு பழிவாங்கவேண்டும் என்ற நோக்கதிற்காகதான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எனது முதன்மை விசாரணையில் எதிரி என்னை அடித்ததாக கூறிய விவரங்களை போலிசார் சொன்னதின் அடிப்படையில் தான் கூறினேன் என்றால் சரிதான். தற்போது நானும் எதிரியும் ஊர்காரர்கள் முன்னிலையில் சமாதானமாகவிட்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த சமாதான மனு எ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சமாதான மனுவில் உள்ள விவரங்களை படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்

மருமகள் என் மகனை விட்டு சென்றுவிட்டார் என்ற கோவத்திலும் எதிரி என் மகனிடம் என் தங்கையை ஏன் பிரிந்து இருக்கிறாய் என்று கேட்டதினாலும் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) மலர்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 2/2022
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 5

| Name: | அருண்குமார் | Calling: | மேஸ்திரி |
|---|---|---|---|
| Father's Name: | மணிமாறன் | Religion: | |
| Village: | கொத்தக்கோட்டை | Age: | 36 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 27.03.2026 நேரம் : 01.35 PM

(எதிரி ஆஜர் . )

அ.சா.5 மனுவின்பேரில் அழைத்து அனுமதிக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

ஆஜர் எதிரி என் மனைவியின் அண்ணன் என்றால் சரிதான். நானும் என் மனைவியும் பிரிந்து வாழ்கிறோம் என்றால் சரிதான். எத்தனை வருடமாக பிரிந்து வாழ்கிறோம் என்றால் 4 வருடமாக பிரிந்து வாழ்கிறோம். எத்தனை குழந்தைகள் என்றால் 1 குழந்தை, நான் தான் பார்த்து வருகிறேன். குழந்தையை என் மனைவி கேட்டதாலும் நான் தரவில்லை என்பதால் தான் பொய்யாக என் அம்மாவை வைத்து எதிரியின் மீது ஒரு வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். சம்பவத்தின் போது நான் வீட்டில் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. நானும் எதிரியும் சமாதானம் ஆகிவிட்டோம். யாரும் என்னை கட்டாயப்படுத்தவில்லை என்றால் சரிதான். **சமாதான மனு ஏற்கனவே எ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) அருண்குமார்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K